1975 மார்ச் 24]

கொள்ளிடம் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்

*445. வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கொள்ளிடம் கூட்டுறவு பால் வழங்கு சங்கம் தற்பொழுது செயல்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம். கொள்ளிடம் பால் வழங்கு கூட்டுறவு சங்கம் பால் உற்பத்திக் குறைவு, முறைகேடான நிர்வாகம், உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு இன்மை ஆகிய காரணங்களால் 28—5—1972 முதற்கொண்டு செயல்படவில்லை.

(இ) 1970–71-ல் அச்சங்கத்திற்கு அரசு ரூ. 41,500 அளவிற்குக் கடனும் ரூ. 41,500 அளவிற்கு உதவித் தொகையும் வழங்கியது. கடன் தொகையில் 8,000 ரூபாயை மட்டுமே சங்கம் திருப்பிச் செலுத்தியது. எஞ்சியுள்ள ரூ. 33,500 அசலையும், ரூ. 8,456.93 வட்டியையும் அது செலுத்த வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

தமிழ்நாட்டில் தனியாக முதலமைச்சரின் வறட்சி நிவாரண நிதி அமைக்கப்பட்டதும், அதன் விளைவுகளும் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர்,

"Serious situation arising out of unwanted rivalry with the Centre by constituting a separate Fund for Relief and making it a party issue in collections and consequent unrest"